

வில்லிவாக்கம் சட்டமன்ற தொகுதி, மேடவாக்கம் டேங்க் ரோடு, அயனாவரம் தமிழ்நாடு மனநல மற்றும் மருத்துவ நரம்பியல் நிறுவனம் அருகாமையில் ரூ.93.54 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் சார்பில் கட்டப்பட்டு வரும் 203 அடுக்குமாடி குடியிருப்புகளின் பணிகளை அமைச்சர்கள் சு.முத்துசாமி, பி.கேசேகர்பாபு அவர்கள் ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர். இந்த ஆய்வின்போது தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத் தலைவர் பூச்சி எஸ்.முருகன் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

## சென்னை பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு

# திறன்மிகு தானியங்கி குடிநீர் வழங்கும் இயந்திரம்!

## மேயர் திருமதி ஆர்.பிரியா தொடங்கி வைத்தார்!

சென்னை,அக்.15-

பெருநகர சென்னை மாநகராட்சியின் சென்னை பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு தூய்மையான குடிநீர் வழங்கும் வகையில் முதற்கட்டமாக ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்களின் பயிலும் 16 சென்னை பள்ளிகளில் திறன்மிகு தானியங்கி குடிநீர் வழங்கும் இயந்திரத்தினை தொடங்கி வைக்கும் விதமாக அண்ணா நகர் மண்டலம்,செனாய் நகர் புல்லா அவென்யூவில் உள்ள சென்னை பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் ரூபாய் 10 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட திறன்மிகு குடிநீர் தானியங்கி இயந்திரத்தின் பயன்பாட்டினை மேயர் திருமதி ஆர்.பிரியா நேற்று (14.10.2025) தொடங்கி வைத்தார். இதன் மூலம் இந்த பள்ளியில் பயிலும் 1373 மாணவர்கள் பயன்பெறுவர்.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் படி, பெருநகர சென்னை மாநகராட்சியின் கல்விக்கான மேம்பாட்டுத் திட்டங்கள் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதன் தொடர்ச்சியாக, சென்னை பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்காக முதற்கட்டமாக ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் பயிலும் கொளத்தூர், திருவான்மியூர், வேளச்சேரி, தரமணி, மடுவின்கரை, புதிய வண்ணாரப்பேட்டை, கே.கே.நகர் சென்னை மேல்நிலைப்பள்ளிகள், எம்.எச்.சாலை, மேற்கு சைதாப்பேட்டை, புல்லா அவென்யூ, புத்தா தெரு, மார்க்கெட் தெரு சென்னை பெண்கள் மேல்நிலைப்பள்ளிகள், செம்மஞ்சேரி மற்றும் எம்.ஜி.ஆர். நகர் சென்னை நடுநிலைப் பள்ளிகள், ஜோன்ஸ் தெரு சென்னை தொடக்கப்பள்ளி, சைதாப்பேட்டை சென்னை ஆண்கள் மேல்நிலைப்பள்ளி என மொத்தம் 16 சென்னை பள்ளிகளில் ரூ.1.60 கோடி மதிப்பீட்டில்

16 எண்ணிக்கையிலான திறன்மிகு தானியங்கி குடிநீர் வழங்கும் இயந்திரங்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு, தற்போது புல்லா அவென்யூ, மார்க்கெட் தெரு மற்றும் சைதாப்பேட்டை ஆகிய 3 சென்னை பள்ளிகளில் தானியங்கி குடிநீர் வழங்கும் இயந்திரங்கள் அமைக்கப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி சென்னை பள்ளிகளில் ஏற்கனவே குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரம் மூலம் நாளொன்றுக்கு 250 லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வந்தது. தற்போது மாணவர்களின் கூடுதலான குடிநீர் தேவையின் அவசியத்தைக் கருத்தில் கொண்டு இந்த தானியங்கி குடிநீர் வழங்கும் இயந்திரம் பொருத்தப்பட்டு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இரண்டாம் கட்டமாக, 500 முதல் 1000 மாணவர்கள் பயிலும் 35 சென்னை பள்ளிகளில் ரூ.3.50 கோடி மதிப்பீட்டில் திறன்மிகு தானியங்கி குடிநீர் வழங்கும் இயந்திரம் அமைக்கும் பணிகள் தொடங்கப்படும்.

இந்நிகழ்ச்சியில், ஆணையாளர் திரு.ஜெ.குமரகுருபரன், இணை ஆணையாளர் (கல்வி) திருமதி க.கற்பகம், மத்திய வட்டார துணை ஆணையாளர் எச்.ஆர். கௌஷிக், நிலைக்கு முத் தலைவர்கள் நே.சிற்றரசு (பணிகள்), த.விசுவநாதன் (கல்வி), மண்டலக்குழுத் தலைவர் கூ.பி.ஜெயின், மாமன்ற உறுப்பினர் திருமதி மெட்டில்டா கோவிந்தராஜன் மற்றும் அலுவலர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## குன்றத்தூர் தெற்கு ஒன்றிய தி.மு.க. கிளை செயலாளர்கள்—

# பாகநிலை முகவர்கள் - பாக டிஜிட்டல் முகவர்கள் கலந்தாலோசனைக் கூட்டம்!

## ஒன்றியக் கழகச் செயலாளர் படப்பை ஆ.மனோகரன் வேண்டுகோள்!

காஞ்சிபுரம், அக்.15-

குன்றத்தூர் தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் படப்பை ஆ.மனோகரன் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:-

குன்றத்தூர் தெற்கு ஒன்றிய தி.மு.க கிளை செயலாளர்கள், பாகநிலை முகவர்கள் (BLA 2), பாக டிஜிட்டல் முகவர்கள்(BDA) கலந்தாலோசனைக் கூட்டம் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளர் - குறு,சிறு, நடுத்தர தொழில் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் ஆணைக்கிணங்க,

திருபெரும்புதூர் சட்டமன்றத் தொகுதி,குன்றத்துார் தெற்கு ஒன்றியம் உள்ளடங்கிய மாடம்பாக்கம், காவனூர், ஆதனூர், எழிச்சூர்,வடக்குப்பட்டு, நாட்டரசன்பட்டு,செரப்பணஞ்சேரி, வைப்பூர் ஆகிய ஊராட்சிகளில் இன்று (15.10.2025- புதன்கிழமை) கீழ்க்கண்டவாறு நடைபெற உள்ளது.

கூட்டம் நடைபெறும் பாகம் எண், ஊராட்சி, ஒருங்கிணைப்பாளர், நேரம் / இடம் விவரம் வருமாறு:-

359,360,361,362,363 364,365,366,367- மாடம்பாக்கம், 355,356- காவனூர், ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர் ரா.தீபக், 343,344,345,346,347, 348,349,350,357,358 - ஆதனூர்- மாவட்ட தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் என்.எஸ்.இளங்கோ, மாலை 04.00 மணி - ஸ்ரீ லட்சுமி நாராயணா திருமணமண்டபம், மாடம்பாக்கத்திலும் 302,303 - எழிச்சூர், 304,305-வடக்குப்பட்டு, 306,307-நாட்டரசன்பட்டு- ஒன்றிய மாணவர் அணி அமைப்பாளர் அ.ஜமீர், 313,314,315,316,317,318- செரப்பணஞ்சேரி, 319,320,321 - வைப்பூர்- குன்றத்தூர் தெற்கு ஒன்றிய பொறுப்புக் குழு உறுப்பினர் சி.பார்த்தசாரதி, மாலை 05.00 மணி- ஒரகடத்திலும் கூட்டம் நடைபெறுகிறது.

மேற்படி பாகங்களில் கலந்தாலோசனைக் கூட்டம் திருப் பெரும்புதூர் சட்ட மன்றத் தொகுதி மேற்பார்வையாளர் கழக வர்த்தகர் அணி துணைச் செயலாளர் கே.ஜி.பாஸ்கர் சுந்தரம் தலைமையில் நடைபெற உள்ளதால் அந்தந்த பாகத்திற்குரிய கிளை கழகச் செயலாளர்கள், வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (BLA 2) பாக டிஜிட்டல் முகவர்கள் (BDA), சிறப்பு அழைப்பாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டு கூட்டத்தை சிறப்பித்திடுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



காஞ்சிபுரம் ஒன்றிய அளவிலான கலைத் திருவிழா – 2025 பல்திறன் போட்டிகளை, காஞ்சிபுரம் பச்சையப்பன் மேல்நிலைப் பள்ளியில் சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ. துவக்கி வைத்து சிறப்புரையாற்றினார். உடன் மேயர் திருமதி மகாலட்சுமி யுவராஜ், ஒன்றிய குழு பெருந்தலைவர் மலர்கொடி குமார், ஒன்றிய செயலாளர் பி.எம். குமார், நித்யா சுகுமார், அலுவலர்கள், தலைமை ஆசிரியர்கள் (ம) ஆசிரியர்கள், மாவட்ட, மாநகர, பகுதி, ஒன்றிய, வட்ட, கிளை கழக செயலாளர்கள், நிர்வாகிகள், கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், மற்றும் ஏராளமான மாணவர்கள் கலந்து கொண்டனர்.




சைதை மேற்கு பகுதியில் உள்ள 139, 139அ, 140, 140அ, 142, 142அ ஆகிய வட்டங்களில் பாக களப்பணியாளர்கள், பாக முகவர்கள் BLA2 நேர்காணல் சைதை மேற்கு பகுதிச் செயலாளர் எம்.கிருஷ்ணமூர்த்தி எம்.சி. தலைமையிலும், வட்டகழக செயலாளர்கள் சை.மு.சேகர், ந.தமிழரசு, எஸ்.பி.கோதண்டம், எம்.நாகா, அட்கோகமலநாதன் முன்னிலையில் நடைபெற்றது. சைதாப்பேட்டை சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் எழும்பூர் கே.எஸ்.ரவிச்சந்திரன் பங்கேற்று பாக முகவர்களை நேர்காணல் செய்தார். பொதுக்குழு உறுப்பினர்கள் சைதை மா.அன்பரசன், வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன் எம்.சி., களக்காடிஎல்லப்பன், எம்.எஸ்.ஹரிபாபு, மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் சைதை சாதிக், நா.மணிகண்டன், ஆர்.கிருஷ்ணகுமார் பகுதி கழக நிர்வாகிகள் டி.என்.சிவமணி, த.சம்பத், ஆர்.ரமேஷ், வி.பி.ஜானகிராமன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

